


மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.


இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.


ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 4



- உங்கள் கண்களை மேலே உயர்த்துங்கள்
- தேவனுடைய உலகமானது ஒரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது
- நாகூம் காட்டும் நினிவே
- சகிப்புத்தன்மை
- ஆரம்ப கால நியாயாதிபதிகள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christesdelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களியிருந்து உருவானது. இதன் அர்த்தம் “கிறிஸ்துவில் சகோதரர்” என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் ‘வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற’ மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேரான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூற வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.


ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk


## புது சிருஷ்டி பதிப்பாளர் குழு


**லினஸ் டேனியேல் : ஒருங்கிணைப்பாளர்**

**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**

**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் திரு. சந்திரமோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**


இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.


இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*“இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின” (2. கொரிந்தியர் 5:17).*



# உங்கள் கண்களை மேலே உயர்த்துங்கள்

இது சூரிய வெளிச்சமும், மென்மையுமான கோடை காலத்தின் ஒருபிற்பகல் வேளை, ஒரு வாரமாக வேலைப்பளுவாக இருந்ததால் அதிலிருந்து இளைப்பாற முடிவெடுக்கிறீர்கள்.




நிழல்படிந்த ஓர் ஒடுங்கிய பள்ளத்தாக்கின் வழியாக நீங்கள் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். உலகத்தின் இப்பகுதியில் நாங்கள் ‘‘நீரோடை’’ என்று அழைக்கின்ற ஒரு சிற்றாறு, இலைகள் அடர்ந்த காடுகளினூடாக அதன் பாதையில் துள்ளி விழுந்து ஓடுகின்றது. பாறை நிறைந்த செங்குத்தான பாதை வழியாக ஏறி நீங்கள் கடைசி மரகூட்டங்களுக்கு மேலாக கதிரொளியில் எழுந்து நிற்கும் போது உங்கள் முன்னால் பழங்கால கோட்டை ஒன்று எழுந்து நிற்பதையும், அது பெரணி செடிகள் மூடிய குன்றுகளுக்கு அப்பாலும் பரந்து செல்வது போல காட்சி அளிக்கின்றது.

உங்கள் முன் நிற்கும் தோற்றத்தின் அளவையும் கம்பீர அழகையும் கருத்தில் கொள்ளும் போது ஒரு அமைதியின் உணர்வை நீங்கள் அனுபவிக்கிறீர்கள். உங்களது கண்ணுக்குள் செல்லும் கண்ணின் காட்சிகளை கண்டு, நின்று வியப்படைகிறீர்கள்.

## நீங்கள் என்ன பார்க்கிறீர்கள் ? (What do you see?)

மேற்புறமாகவும் வெளிப்புறமாகவும், கருத்தூன்றிப் பார்க்கும்படி அடிக்கடி மக்கள் பயணத்தை நிறுத்தி நின்று கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் எப்போதும் காரியங்களை காண்பதில்லை. தாவரங்களையும், விலங்குகளையும் ஆய்கின்ற ஒருவர், நம்மில் அநேகரால் காணத்தவறவிட்ட வேறுபாடுகள் தாவரங்களிலும் மலர்களிலும் இருப்பதைக் கவனித்து இனங்கண்டு கொள்வார் அப்பகுதியில் நெடுங்காலத்திற்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதை ஒரு உள்ளூர் வரலாற்று ஆசிரியர் காண்கிறார். வானங்களை நோக்கிக் கொண்டிருக்கின்ற ஒரு வானிலை ஆய்வாளர், வரப்போகின்ற மாற்றங்களை வருமுன்னதாகவே காண்கிறார். இப்படிச்சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இந்த சிறப்பு ஆய்வாளர்கள் எல்லாம் முக்கியமாக சுட்டிக்காட்டுபவைகளை உண்மையில் காணத்தவறிவிடுகிறார்கள்.

நெடுங்காலத்திற்கு முன்பு ஒரு கவிஞர் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது அவர் கண்ட காட்சிகள் இதுதான்.

‘‘எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்ளுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார். உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை” (சங்கீதம் 121:1-4)

அவன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது தன்னைச் சூழ்ந்திருந்த ஒவ்வொன்றும் இவ்வுலகைப் படைத்த தேவனை சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதை கண்டதை கவனியுங்கள். ஆகவே தன்னைச் சூழ்ந்திருக்கும் படைப்புகளின் அற்புதங்களால் அகத்தூண்டல் பெற்றவனாக உள்ளுணர்வினால் உந்தப்பட்டவனாக தேவன்பாலுள்ள அவனது துதிகளை வெளிப்படுத்தி விட்டு பின்னர் அவனது வாழ்க்கைக்கு உதவிசெய்யும்படி தேவனை நோக்கிப் பார்க்கிறான்.

## ஆவிக்குரிய அகத்தோற்றம் (Spiritual Insight)

இந்நாளில் சமயசார்பற்ற சமுதாயத்திலுள்ள மக்கள் சிந்திப்பதுபோல் அல்லாமல் முற்றிலும் மாறுபட்ட வகையில் கடந்த காலங்களில் தேவனை முழு மனதுடன் விசுவாசித்து, அவர்களது வாழ்வின் அனைத்து சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் அவர்களுக்கு உதவும்படி அவரையே நம்பிக்கொண்டிருப்பது அன்றைய மக்களின் இயல்பாக இருந்தது. பொருள் சம்பந்தமான காரியங்களையும் அல்லது வாய்ப்புகளையும் நிகழ்வுகளையும் விட மேலானது வாழ்விற்கு உண்டு என்பதையும் அவர்கள் அந்நாளில் இனங்கண்டுகொண்டார்கள். இவ்வுலகை தேவனே வடிவமைக்கத் திட்டமிட்டு உருவாக்கியிருப்பதால், ஒவ்வொன்றின் பின்னாகவும் ஒரு நோக்கமும் ஒரு மாதிரியும் இருக்கிறதென்பதை அவர்கள் விசுவாசித்தார்கள். இங்கே இன்னொரு சங்கீதக்காரன் தான் கண்டதைக் குறித்து தனது பாராட்டை இவ்விதமாக வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறான்.

“அவர் பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகளை வரவிடுகிறார். அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது. அவைகள் வெளியின் ஜீவன்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்கும். அங்கே காட்டுக்கழுதைகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும். (சங்கீதம் 104:10,11)

காணப்படுகின்ற அனைத்தையும் படைத்தவரும் பராமரிப்பவருமாகிய அவரைத் தேடிப்பார்க்கும் போது வெளிப்படையானதும் மேல் நோக்கியதுமான ஒரு பார்வை திருப்தி அடையாததாக இருக்கிறது. நீரோடையின் ஆதாரத்தை நாடித்தேடி செல்லும் ஒரு நபரைப்போல், சங்கீதக்காரனும், தேவன் ஒவ்வொன்றையும் உருவாக்கி இருப்பதாலும் அதனை ஒரு நோக்கத்திற்காக உருவாக்கி இருப்பதாலும், அவனுடைய சொந்த வாழ்க்கையானது அந்நோக்கத்தின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். என்பதையும் உணர்ந்துகொள்கிறார். ஆகவே தான் அவன் கூறுகிறான்.

“கர்த்தருடைய மகிமை என்றென்றைக்கும் விளங்கும். கர்த்தர் தம்முடைய கிரியைகளிலே மகிழுவார்..... நான் உயிரோடு இருக்குமட்டும் என் கர்த்தரைப்



பாடுவேன். நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்.... என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி (சங்கீதம் 104:31-35).

## முதன்மையானது முதலாவது (First things First)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்போல் ஆவிக்குரியய காரியங்களில் அதிகக் கூர்மையும் அதிகத் தெளிவும் உள்ள அகக்காட்சியை/உள்ளுணர்வைப் பெற்றவர்கள் வேறு ஒருவரும் இருக்கமுடியாது. இவ்வுலகில் அவர் வாழ்ந்தபோது எங்கு பார்த்தாலும் ஆவிக்குரிய பாடங்கள் அவரைச் சூழ்ந்திருப்பதைக் கண்டார். வாழ்க்கையின் மிக ஆழமான காரியங்களைப் புரிந்துக் கொள்ள அவர் கவனித்தவைகளும் கண்டவைகளும் அவருக்கு உதவியாக இருந்தன என்பதை அவைகள் ஒவ்வொரு காரியங்களிலும் முகத்தைக் காட்டின. சில நேரங்களில், அவருடைய வெளிப்படையான போதனைகள் கூட அவரது கூரிய பார்வையுள்ள கவனிப்பினால் புதுவர்ணம் பூசப்பட்டிருக்கின்றன. அன்றாட உபத்திரவங்களினால் கவலைப் படக்கூடாது என்று அவரது பின்னடியார்களிடம் வற்புறுத்திக் கூறியபோது, அவர் இப்படிச் சொன்னார்.







‘‘ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?” (மத்தேயு 6:25,26)




தானியங்களை விதைத்துக்கொண்டிருக்கும் காகங்களை ஒருவரும் கண்டிருக்க மாட்டார்கள். திறந்த வெளியில் தானியங்கள் விழும்போது அவைகளை கொத்தி விழுங்குவதில்தான் சுறுசுறுப்பாக இருக்கும். தங்கள் சொந்த ஆகாரத்தை வளர்த்திடும்படி எந்த புறாவுக்கும் ஒரு காய்கறிபாத்தியும் கிடையாது. ஆனால் மனிதர்களால் கவனமாய் விதைத்தும் நடப்பட்டதுமான காய்கறித் தோட்டங்களில் திடீரென்று தாக்குதல் நடத்துகின்றன. பறவைகளுக்கு எது உண்மையோ அதுவே நமது சொந்த

நிலங்களிலும் பாதை ஓரங்களிலும் கலிலேயாவின் மலைப்புறங்களில் வரிசையாய் நிற்கும் காட்டுமலர்களுக்கும் உண்மையாக இருக்கின்றது. ஏனென்றால் இயேசு சொன்னார்:

“உடைக்காவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறது மில்லை. என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வமகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” (மத்தேயு 6:28,29)

தேவன் தாம் படைத்த இவ்வுலகைக் குறித்து எவ்வளவு அக்கரையாயிருக்கிறார் என்றும் இவ்வுலகை படைத்த அந்த தேவனிடம் நாம் எவ்வளவு அக்கரையாயிருக்க வேண்டும் என்றும் கூற வந்த அவருடைய போதனையினை வலுவூட்டும்படி இயேசு தாம் கண்ணுற்றவைகளைப் பயன்படுத்தினார். தேவன் எந்த அளவு நம்மை அக்கரையோடு கவனிக்கிறார் என்றும் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் நாம் இரட்சிக்கப்படும்படி அவரால் எவ்வளவு தூரம் செல்லமுடியும் என்றும் வெளிப்படுத்திக் காட்டுவது அவரது ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. நாமும் கூட அதிகமான அளவு தேவனைப் பற்றியும், அவர் நம்மிடமிருந்து என்ன விரும்புகிறார் என்பதைப் பற்றியும் அக்கரைக் கொண்டாக வேண்டும் என்று இயேசு சொன்னார். இது இங்கே இரத்தின சுருக்கமாக ஒரு வரியில் கூறப்பட்டுள்ளது. இவ்வனைத்து பொருட்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பது, வாழ்க்கையின் கவனத்தை திசைத்திருப்பக்கூடும் என்று இயேசு சொல்கிறார்.

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” (மத்தேயு 6:33).

பரபரப்பான நமது வாழ்வில், நமது சுற்றுப்புற அழகினால் அது ஒரு அழகு மலரினாலோ அல்லது பலவர்ணம் ஜொலிக்கும் கதிரவன் மறையும் நேரத்தினாலோ அல்லது மலைக்குன்றுகளின் ஒரு தோற்றத்தினாலோ சுண்டியிழுக்கப்பட்ட தருணங்கள் நம் அனைவரது வாழ்விலும் இருக்கும். ஆகவே அடுத்தமுறை உங்களைச் சூழ்ந்துள்ள அற்புத உலகை மனமகிழ்ந்து பாராட்டும் முன்பு ஒரு கணம் தாமதித்து, சங்கீதக்காரனைப் போல் சில விநாடிகள் எடுத்து தேவனது படைப்புக்காகவும் அவரது தொடர்ச்சியான பிரசன்னம் உங்கள் வாழ்வில் இருப்பதற்காகவும் அவருக்கு நன்றி சொல்லுங்கள். மேலும் நீங்கள் உங்கள் கண்களை ஏறெடுத்து நோக்கும்போது உங்களால் என்ன பார்க்கமுடியும் என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

“உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்... எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது” (சங்கீதம் 8:3,4,9).

**லிசி ஃபால்க்ஸ்**



# தேவனுடைய உலகமானது ஒரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது

அநேகரால் தீய எண்ணத்துடன் கேட்கப்படும் ஒரு கேள்வி “இந்த உலகம் எப்படி வந்தது?” உலகம் உருவானது பற்றி வேதாகமம் - ஆதியாகம புத்தகத்தில் விரிவாக சொல்லப்பட்டிருந்தும் கூட அதனைக் ‘கட்டுக்கதை’ அல்லது ‘பழங்கால கதை’ என்று அடிக்கடி தள்ளிவிடுகின்றனர். ஆனால் விஞ்ஞானியாகிய ஜான் கெல்லவெல் அப்படிச் செய்வது பெரிய தவறு என்று இப்பொழுது விவரித்துக் கூறுகின்றார். அநேக புத்தக வெளியீடுகளுக்கு ஜான் ஆசிரியராக இருக்கிறார். அதில் மிகவும் அண்மையில் வெளியிடப்பட்டதாக இருக்கும் புத்தகம் “படைப்பா அல்லது பரிணாமமா?”

## பெரிய அளவு வெடித்ததினால்?


வேதாகமம் கூறுவதை கவனியாமல் விட்டு விடுவது இருகாரணங்களின்படி ஒரு தவறாக இருக்கிறது. முதலாவதாக வேதாகமம் கூறும் படைப்பின் விளக்கமானது தேவனுடைய நோக்கத்தை நமக்குச் சொல்லிக் கொண்டிருப்பதால் நாம் அதனைப் பாராட்டியாக வேண்டும். இரண்டாவதாக, இன்றும் கூடுதலான தகவல்கள் குவிந்தவண்ணமிருப்பதால் தவிர்க்க முடியாத அளவுக்கு அறிவியல் விளக்கங்களானது மறு பரிசீலனை செய்து திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது.

இந்த பிரபஞ்சமானது விரிவடைந்து கொண்டு இருப்பதைப் போலத் தோன்றுகிறதாக அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்த பின்னர் ஒரு புகழ்பெற்ற முரண்பாடு எழுந்துள்ளது. இப்பிரபஞ்சமானது நிலையான நிலையில் (Steady state) அதாவது ‘இடைவெளிகளை’ சீரானநிலையில் நிரப்புவதாக பொருட்கள் உருவாக்கப்பட்ட வண்ணமாக இருக்கின்றதா அல்லது விண்வெளியில் ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு காலத்தில் ஏற்பட்ட பெரிய வெடித்தலினால் உலகம் உண்டாயிற்றா? என்பதுதான். ஒரு பெரிய வெடித்தலின் முறையில் ஒரு துவக்கம் உண்மையில் உண்டாயிருக்கும் என்று பெரும்பாலான உலகதோற்றத்தை ஆராயும் அறிவியலறிஞர்கள் தற்போது நம்பும் முடிவுக்கு வந்துள்ளனர்.

பெரும்பாலான அறிவியல் நம்பிக்கைகளை போல இது இன்னும் அநேக கேள்விகளை உருவாக்குகிறது - ‘‘இப்போதிருப்பது போல இது எப்படி துவங்கியிருக்கும்? மேலும் இதற்கு முன்பு பிரபஞ்சத்தின் நிலை எப்படி இருந்தது? இது என்றென்றைக்கும் விரிவடைந்து கொண்டே செல்லுமா? இப்பிரபஞ்சமானது எல்லையில்லாததா?” இப்பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றியும் பூமியின் உயிரினங்களின் தோற்றம் பற்றியும் அறிவைத்தேடி ஆண்டுதோறும் ஆராய்ச்சி நிதியானது பெருமளவில் செலவழிக்கப்பட்டு வருகிறது. நம்மில் அநேகருக்கு இவ்வகையான கேள்விகள் உற்சாகமானதாக இருந்தாலும் இவைகள் நம் அன்றாட வாழ்வில் உருப்படும்படியான எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இக்கேள்விகளுக்கான பதில்களை நாம் அறிந்திருந்தாலும் அதனால் என்ன வித்தியாசம் ஏற்படும்?

## கவனத்திற்குரிய கேள்விகள்

நம்மில் அநேகர் விரும்பும் நிச்சயமான விடைகளுக்கான கேள்விகள் : “நாம் ஏன் இங்கே இருக்கிறோம்?’ ‘நம் வாழ்வின் நோக்கம் என்ன?’, ‘வாழ்க்கையானது



எங்கே நடத்திச்செல்கின்றது' நடத்திச் செல்வதற்கான இடம் இருக்கின்றதா? மேலும் 'ஏதாவது நேர்ந்தால், மரணத்தில் என்ன நிகழ்கிறது?'

குறிப்பிடத்தக்க வகையில் இம்முக்கியமான கேள்விகளுக்கான பதில்கள் அறிவியலில் இல்லை. ஏனென்றால் விஞ்ஞானிகள் எல்லாம் 'எப்படி?' வந்தது என்று ஆராய்கிறார்களே தவிர 'ஏன்' என்று ஆராய்வதில்லை. எடுத்துக்காட்டாக புல் பச்சையாய் தோன்றுவதற்கு ஒரு பகுதியான காரணம் என்னவென்றால் பச்சையம் என்ற 'குளோரபில்'லானது பச்சையைத் தவிர பிற வர்ணங்களின் ஒளியை ஈர்த்துக்கொள்வதால்தான்.

நீலமாகவோ, அல்லது வேறு வண்ணத்தில் இல்லாமல் அது ஏன் பச்சையாக இருக்கிறது என்று நமக்குச் சொல்வதில்லை. அநேக விஞ்ஞானிகளுக்கு உச்சகட்ட நோக்கம் எதுவும் நம் வாழ்வில் இல்லை. ஏதோ ஒருவகை நோக்கமும் இல்லாமல் பிரபஞ்சம் தோன்றியது, என்றும் உயிரினங்கள் ஏதோ தற்செயலாக தோன்றியது என்றும் கருதுகின்றனர். அத்தகைய ஒரு எளிமையான அணுகுமுறையானது 19 மற்றும் 20வது ஆண்டு துவக்க காலத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவு அறிவியல் கண்டு பிடிப்புகளானது வெடித்துக்கிளம்பிய வண்ணம் பெருகிக்கொண்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது கேள்விக்குரியதாக உள்ளது.

இன்னும் அதிகமாக நமது பிரபஞ்சத்தின் மேற்புற நோக்கியும் வெளிப்புற அற்றத்தை நோக்கியும் பார்ப்போமானால் அல்லது இன்னும் அதிக ஆழமாகவும் அதிக நெருக்கமாகவும் உயிரினங்களின் அமைப்பையும் பார்க்கும்போது, மிக அதிகமான அளவு விளக்க முடியாத சிக்கல் இருப்பதை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். டார்வின் நாளிலிருந்த 'சாதாரண' அமீபாவும், மிகச்சிறியவைகளை ஆராயும் அறிவியலறிஞரான ருத்தர் ஃபோர்டின் காலத்தின் அணுவின் மாதிரியும் இன்று அனுபவமற்ற கொள்கை போல தோன்றுமளவிற்கு உள்ளது. கால, இட அளவுகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன என்றும் ஐன்ஸ்டீன் என்பாரின் கொள்கையும், கதிர் இயக்கத்தில் ஆற்றல் அலைவீச்சு பற்றிய போகரின் கொள்கையும், இப்பிரஞ்சத்தின் பிறப்பு அமைப்பு ஆகியவை பற்றிய அண்மை கால ஆய்வுகளும் - எல்லாவற்றையும் ஆளுகை செய்யும் ஏதோ ஒரு சிந்தை மனம் அல்லது படைப்பின் நோக்கம் இருக்கிறதோ என்று கடவுள் நம்பிக்கை இல்லாத விஞ்ஞானிகளையும் கூட வியப்படைய வைக்கும் ஒரு புள்ளிக்கு நம்மை கொண்டு வந்திருக்கிறது. அச்சிந்தையானது நமக்கு வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### படைப்பைக் குறித்த வேதாகம விளக்கம்


நிகழ்ச்சிகளின் படிப்படியான விளக்கங்களை நமக்கு தருவதற்குப் பதிலாக எல்லா காரியங்களும் ஏன் இவ்வண்ணமாக இருக்கின்றன என விளக்கிடவே படைப்பைப் பற்றிய விளக்கம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:1) என்ற கம்பீரமான துவக்க உரையானது ஒரு சிருஷ்டிகரின்



சுறுசுறுப்பான ஈடுபாட்டை/செயல்பாட்டை உணர்த்துகின்றது. சொல்லப்பட்ட வார்த்தைகளின் ஒழுங்கை கவனிக்கவும். 'பூமி' என்பது ஒருமையிலும் 'வானங்கள்' என்பது பன்மையிலும் வருகிறது. (மூலபாஷையான எபிரெயமொழியிலும் ஆங்கிலத்திலும் பூமி ஒருமையிலும் வானம் பன்மையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது). தேவன் பரந்த பிரபஞ்சத்தை (வானங்களை) உருவாக்கினார் ஆனால் அவரது நோக்கத்தை ஒரு கோளாகிய பூமியில் மையப்படுத்தினார் என்பதைப் படித்துப் புரிந்து கொள்ளும்போது மிகப் பெரிய காரியமாக இருக்கிறதல்லவா?

அடுத்த வசனமானது, உயிர் வாழ்வதற்கு முற்றிலும் உதவமுடியாத இருண்டதும் பெரும் குழப்பமுமான ஒரு பூமியைப் பற்றிய விளக்கம் தருகிறது. அவருடைய ஆவியானது தண்ணீர்களின் மேலே அசைவாடிக் கொண்டிருக்கிறது. இருளைத் துரத்தும்படி வெளிச்சமானது அறிமுகப்படுத்தப்படுகிறது. உட்கருத்துள்ள தேவனின் செயல்பாடுகள் இப்போது தெள்ளத்தெளிவாகிறது. இவ்வேதபகுதியைக் கவனமாய் ஆராயும் போது, பூமியினை புதுரூபமாக்கும் அநேக கட்டங்களானது புதியன உருவாக்கும் செய்கையால் அல்ல, இருக்கின்ற நிலைகளிலுள்ள மாற்றங்களால் நிறைவேற்றப்பட்டது. அடுத்த கட்டம் செல்லும் ஒவ்வொரு இடைவேளையிலும் உயிரினங்கள் குறிப்பாக மனுக்குலம் வாழ்ந்திடச் செய்யும் நிலையை அடைந்த ஒரு கோளாக இருக்கிறது. புதியன உருவாக்கும் செயலானது 'பிரித்தார்' என்ற முக்கிய வார்த்தையில் வைக்கப்பட்டுள்ளது.

பகலையும் இரவையும் கொடுப்பதற்கு வெளிச்சமானது இருளிலிருந்து பிரிக்கப்பட்டது. (வ.4)



கீழே உள்ள தண்ணீர்களிலிருந்து மேல் உள்ள தண்ணீர்கள் பிரிக்கப்பட்ட போது மேகங்கள் என்ற காற்று மண்டலமானது (எபிரெய மொழியில் 'ஆகாய விரிவு' என்ற பொருள்) உருவாக்கப்பட்டிருக்கிறது (வ.7)


காற்று மண்டலத்திற்கு கீழே இருந்த தண்ணீர்கள் ஒன்று சேர்ந்து நிலம் தோன்றி பூமிக்கும் சமுத்திரங்களுக்கும் இடங்கொடுத்தன.

காய்ந்த தரையானது தாவரங்கள் செழித்தோங்க அனுமதிக்கின்றன, காற்றுமண்டலமானது பறவைகள் பறந்து செல்வதற்கு வகை செய்கிறது, சமுத்திரங்களோ அநேகவகையான உயிரினங்களால் நிறைந்து காணப்படுகின்றன. இப்பூமியானது பரந்த அளவில் பல்வகையான மிருகங்களின் வாழ்வுக்கு ஆதரவளிப்பதோடு மனித இனமாகிய சிருஷ்டிப்பின் உச்சகட்டத்திறகு வகை செய்கின்றது. அனைத்து விலங்கினங்களின் வாழ்வும் தாவரங்களால் ஆதரிக்கப்படுகின்றன. இந்த அம்சத்தின் உண்மையினை 29, 30 வசனங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

### அனைத்தும் கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கின்றன

இரவிலிருந்து பகலைப் பிரிக்கின்ற வான்வெளி பொருட்கள் சார்ந்த ஒளிகளின்

விளைவே ‘காலம்’ என்பதாகும். மேலும் அவைகள் ‘அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கின்றன’ (வ.14)




கதிரவன் உதித்தது முதல் அதன் மறைவுவரை உள்ள கதிரவனின் இயக்கத்தையும் (பகல்) சந்திரனின் மாறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களையும் (மாதங்கள்), மாறும் நாளின் நீள அளவையும் (பருவ காலங்கள்) ஆண்டு தோறும் கதிரவன் வானத்தின் உச்சக்கட்ட உயரத்தில் வரும் வித்தியாசத்தையும் அடிப்படையாகக் கொண்டு காலத்தை மதிப்பீடு செய்வதற்கு இது ஆழ்ந்த அறிவுமிக்க அறிக்கையாயிருக்கிறது.

ஆதியாகமத்தின் முதலாம் அதிகாரத்தில் காணப்படும் முழு செயல் முறையும் ஒரு உயிர்வாழ முடியாத நிலையுள்ள ஒரு பூமியின் காட்சியிலிருந்து உயிர்வாழ வகையுள்ள, குறிப்பாக மனித இனம் உயிர்வாழத்தக்க ஒன்றாக தீவிரம் குறையாத வகையில் நகர்கிறது. இப்படி நிகழும் விதமானது முதல் அதிகாரத்திலேயே முடிவடைய வில்லை, காரணம் மனிதஇனம் பரிபூரணமாக குடியிருப்பதற்கான ஏதேன் தோட்டம் சிருஷ்டிக்கப்படுவதை நாம் இரண்டாம் அதிகாரத்தில் பார்க்கிறோம். ஆதாமும் ஏவாளும் தங்களது சொந்தமான கண்டுபிடிப்பு முறைகளை வைத்து தங்களுக்கு சொந்தமான தோட்டத்தை உருவாக்கப்படும்படி அவர்கள் எதிர்பார்க்கப்படவில்லை. தேவனாகிய கர்த்தர் ‘ஒரு தோட்டத்தை உண்டாக்கி’ (2:8) பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும்... (வ.9) ஏற்படுத்தி தோட்டமானது இயற்கையாகவே தண்ணீர்பாய்ச்சப்பட்டது (வ.10) தேவனால் அருளப்பட்டிருக்கும் இத்தகைய முன்னேற்பாட்டுச் செயலானது அவர் தமது படைப்பின் மீது கரிசனை கொண்ட குணாதிசய இயல்பாக இருக்கிறது. (சங். 104:10-31, லூக்கா 12:6,7) படைப்பினைக் குறித்த விளக்கங்களெங்கும், தாம் படைத்தவற்றின் மீது அக்கறைகொண்ட ஒரு வள்ளல் தன்மை கொண்ட சிருஷ்டிகர் நமக்கு இருக்கின்றார் என்பது தெளிவாக இருக்கிறது. “தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது....” என்று உண்மையாகவே நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிப்பின் / புதியன உருவாக்கும் செயல்பாடானது / செய்கையானது ஆதியாகமம் முதல் வெளிப்பாடு வரை வேதாகமம் எங்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. தேவன் தம்முடைய படைப்பை தொடர்ந்து கவனிப்பதால் / விசாரிப்பதால், தேவன்தான் சிருஷ்டிகர் என்று குறைந்தபட்சம் ஐம்பது வேதாகம பகுதிகள் நேரடியாகவும் அல்லது மறைமுகமாகவும் அறிவுறுத்துகின்றன. அவர் இவ்வுலகை ஒரு நோக்கத்திற்காக படைத்திருக்கிறார்.

**படைப்பின் நோக்கம்**

தன் நலம் கருதாத ஒரு தூய்மையான கண்ணோட்டத்திலிருந்து



பார்த்தோமானால் நாமே படைப்பின் நோக்கமாக இருக்கிறோம். எனினும் தேவனுடைய உச்சகட்டமான நோக்கம் என்னவெனில் “சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.” (ஆபகூக் 2:14)

தாவீது ராஜாவினால் அங்கீகரிக்கப்பட்ட அதே நோக்கமானது நடைமுறையில் நனவாக மாறும் காலகட்டத்தை விவரிக்கின்ற சங்கீதம் 72 இல் அவர் எழுதும் போது,

‘‘அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, பூமி முழுவதும் அவருயை மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென்” (சங்கீதம் 72:19).

படைப்பானது நோக்கம் நிறைந்ததாக வேதாகமத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தேவ சித்தத்தை வெளிப்படுத்துகின்றதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக :

“கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்” (வெளிப்படுத்தல் 4:11)

பகுத்தறிவுமிக்க மனிதனை தேவசாயலில் உருவாக்க வேண்டுமென்பது அவருடைய தயவுள்ள நோக்கத்தின் ஒரு பாகமாக இருந்தது. (ஆதி. 1:26,27) மனித இனமானது “தேவதூதர்களைப் பார்க்கிலும் சற்று சிறியவர்களாக” உருவாக்கப்பட்டது என்று நமக்குச் சொல்லப்படுகின்ற சங்கீதம் 8:4-6 வசனங்களில் நமது அந்தஸ்தானது விவரிக்கப்பட்டுள்ளது. தன்னைப்படைத்தவரின் பண்புகளைப் பிரதிபலிப்பதற்காகவே மனிதன் உருவாக்கப்பட்டான். அவனுக்கு படைப்பின் மீது ஆளுகையும், பொறுப்பும் வழங்கப்பட்டிருந்தும் அவனோ இக்கிரகத்தை சூறையாடி சுற்றுப்புற சூழலையும் மாசுபடுத்திவிட்டான்.

இந்நிலை காலவரையில்லாத அளவுக்கு தொடராது, ஏனென்றால் தேவ இராஜ்யத்தை நிலைநாட்டும்படி கர்த்தராகிய இயேசு வரும்போது இவ்வுலகமானது மறுரூபமாக்கப்படும். அத்தகைய மகிமையான காலத்தின் காட்சியினை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் வழங்கியுள்ளனர். (ஏசாயா பார்க்கவும், எடுத்துக்காட்டாக, 2:4; 11:1-9; 35:1-8; 40:4,5; 65:17-25)

நோக்கம் நிறைந்த படைப்பானது, மனித இன பரிணாமக் கொள்கையாளர்களின் நோக்கமற்ற பரிணாமத்திற்கு வலுவாக வேறுபட்டுத் திகழ்கின்றது. சிருஷ்டிகர் ஒருவர் இல்லை என்றால் நாம் உயிர்வாழ்வதிலேயே அர்த்தமில்லாதிருக்கும். அந்த அளவுக்கு நம்மைச் சூழ்ந்துள்ள பூலோக வாழ்வும், நோக்கமும் ஏதுமற்ற நிகழ்ச்சிகளின் விளைவாக இருந்திருக்கும்.

வேதாகமமானது வாழ்க்கைக்கு அர்த்தமளிப்பதோடு படைப்புக்கு நோக்கமுண்டு என்பதையும் வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய நித்தியமான நோக்கத்தில் பங்கெடுக்கும்படி அவர் நம்மை அழைப்பதுதான் அனைத்துக்கும் மேலான அற்புதமாய் திகழ்கின்றது.

**ஜான் கெல்வெல்**

# நாகூம் காட்டும் நினிவே

## பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு உள்ளது.

**ஜான் ராம்ஸ்டென், லண்டன்**

ஆர்வத்தோடு வேதாகமத்தைக் கற்கும் மாணவன் ஒருவனுக்கு லண்டன் அருங்காட்சியகம் மிகுந்த பரவசத்தைக் கொடுக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பகுத்தறிவுவாதி அல்லது அவிசுவாசியும் கூட இந்த அருங்காட்சியகத்தைப் பார்க்கவேண்டும். ஏனெனில் வேதாகமம் உண்மையானது என நிரூபிக்கும் ஏராளமான சான்றுகள் அங்கே உள்ளன. மிகத் துல்லியமான வரலாற்றுப் பதிவுகளும் வேதாகமத்திலுள்ள தீர்க்கதரிசனங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் ஏராளமான சான்றுகளும் நம் பார்வைக்கு உள்ளன.



ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ எழுபது லட்சம் மக்கள் உலகெங்கிலுமிருந்து வந்து அருங்காட்சியகத்தின் காட்சிப்பொருள்கள் நிறைந்த படிமேடைகளைக் கண்டு செல்கிறார்கள். நுழைந்ததும், மேற்குப் பகுதி படிமேடைகளில் எகிப்து, அசீரியா, கிரீஸ் மற்றும் ரோம் பற்றியவை உள்ளன. கிழக்குப் பகுதியில் வேதாகமங்களின் மகத்தான தொகுதிகள் மற்றும் பண்டைய கால கையெழுத்துப் பிரதிகள் காணப்படுகின்றன. அழகானதும் விதவிதமானதுமான வேதாகமங்களைக் கண்டு களித்தபின் பரந்த அந்த அறையைத் தாண்டி வந்தால் அவற்றின் நம்பகத்தன்மையைக் காட்டும் சான்றுகளைக் கண்டு நம்பலாம்.

அசீரியப் படிமேடைகளுக்கு வருவோம். திக்லாத் பிலேசர், சர்கான், சனகெரிப் மற்றும் அசூர்பானிபால் என்ற அஸ்னாப்பார் போன்ற அசீரிய மன்னர்களின் மாளிகைகளின் சுவரின் பகுதிகளைக் காணலாம். புல்டோசர் என்ற நிலச்சமனி, கிரேய்ன் என்ற சுமைதூக்கி, மண்ணை அகற்றும் சாதனம் போன்றவை புழக்கத்திற்கு வராத அந்தப் புராதன காலத்திலும் கட்டிடத் தொழிலாளர்களின் கணிதம் மற்றும் இயற்பியல் அறிவைக் காட்டும் கப்பிகள், நெம்புகோல்கள், சக்கரங்கள் மற்றும் உருளைகள் பற்றிய அறிவு பெற்றிருந்தனர்.

இடைவழியின் நடுவே கறுப்புநிற சதுரத்தூண் ஒன்று சல்மனாசேரின் முப்பத்தைந்து ஆண்டு ஆட்சி காலத்தில் (கி.மு.860-கி.மு.825) அவன் செய்த வீரச்செயல்களைப் பறைசாற்றி நிற்கிறது. அசீரிய சாம்ராஜ்யத்தின் கடைக்கோடியிலிருந்து மக்கள் அரசனுக்குக் காணிக்கை கொண்டு வருவதைக் காணலாம். மதிப்பிழந்த யெகூ என்ற பொல்லாத அரசனும் சல்மனாசேருக்குக் காணிக்கை படைத்தான்.

“ஆனால் யெகூ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நியாப்பிரமாணத்தின்படி



தன் முழு இருதயத்தோடும் நடக்கக் கவலைப்படவில்லை, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின யெரொபெயாமின் பாவங்களை விட்டு அவன் விலகவும் இல்லை. அந்நாட்கள் முதல் கர்த்தர் இஸ்ரவேலைக் குறைந்துபோகப் பண்ணினார், ஆசகேல் அவர்களை இஸ்ரவேலின் எல்லைகளிலெல்லாம் முறிய அடித்தான்.” ( II இராஜாக்கள் 10:31-32)

அசீரியப் பதிவுகளில் ஆசகேலைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளது.

### சனகெரிப்பின் லாகீஸ் அறை

லாகீசு என்று தனி ஒரு அறை இருக்கிறது. அதின் மூன்று சுவர்களில் சனகெரிப் மாளிகையிலிருந்து பெறப்பட்ட கற்பலகைகள் அடுக்கிவைக்கப் பட்டுள்ளன. 2 ராஜாக்கள் 18ல் கூறியதனைத்தும், லாகீசை அவன் எப்படித் தாக்கினான், அவன் ஆள்ரப்சாக்கேயை எசேக்கியாவிடம் அனுப்பியது ஆகிய எல்லா விவரங்களும் அக்கற்பலகைகளில் உள்ளன.

அசீரியர் காலத்திற்கென உள்ள படிமேடைகளில் காணப்படும் காட்சிப் பொருள்கள், வேதாகமத் தீர்க்கதரிசனங்களின் நம்பகத்தன்மையையும், மிகச் சரியாக அவை நிறைவேறினதையும் காட்டும் சான்றுகளாக உள்ளன.

இதுவரை பார்த்ததில், பார்வையாளன் அசீரிய அரசர்களின் வளர்ச்சி, வல்லமை, கொடுமை பற்றியும், அவர்கள் பெற்ற வெற்றிகளினால் எவ்விதம் இஸ்ரவேல் எனும் வடதேசத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்று அறிந்திருக்கலாம். ஆனால், தேவன் தம்ஜனமாகிய யூதர் மேல் நீதியான நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் தம் நோக்கத்தை நிறைவேற்றும் கருவிகளாக அசீரிய அரசர்கள் இருக்கப்போகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. தங்களை முன்பு எகிப்திலிருந்து விடுவித்துக் கொண்டு வந்த தங்கள் தேவனை யூதர்கள் நிராகரித்துவிட்டார்கள். அசீரிய அரசர்களோ தங்கள் மேன்மைக்குக் காரணம் தங்கள் முயற்சிகளே என்று நம்பினார்கள்.

“அவன்: என் கையின் பெலத்தினாலும், என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன்; நான் புத்திமான், நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றி, அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு, வல்லவனை போல் குடிகளைத் தாழ்த்தினேன்” (ஏசாயா 10:13).

அதே தெளிவுடன் வரப்போகும் அழிவைக் குறித்து ஏசாயா, அசீரியாவை எச்சரிக்கிறான்.

“ஆண்டவர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் தமது செயலையெல்லாம் முடித்திருக்கும் போது, அசீரிய ராஜாவினுடைய பெருமையான நெஞ்சின் வினையையும், அவன் கண்களின் மேட்டிமையான பார்வையையும் நான் விசாரிப்பேன் என்கிறார். ஆகையால் சேனைகளின் ஆண்டவராகிய கர்த்தர், அவனைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்குள்ளே இளைப்பை அனுப்புவார், பட்சிக்கும் அக்கினியைப் போலும் ஒரு அக்கினியை அவன் மகிமையின் கீழ் கொளுத்துவார்” (ஏசாயா 10:12,16).

### யோனா மனந்திரும்புதலுக்கு அழைத்தல்

இரக்கமுள்ள தேவனாயிருப்பதால், தம் தீர்க்கதரிசியாகிய யோனாவை அம்மக்கள் தங்கள் வழிகளைச் சீர்ப்படுத்தி, தேவனின் மன்னிப்பை நாடும் படி பிரசங்கிக்க

அனுப்பினார். ஆச்சரியமான விதமாக யோனா ஓரளவு வெற்றி பெற்றார். ஆனால் அந்த மனந்திரும்புதலின் தாக்கம் வெகுகாலம் நீடிக்கவில்லை. இப்படி மனந்திரும்பும் காலம் சென்றுபோயிற்று கர்த்தரிடமிருந்து நியாயத்தீர்ப்பு வருவதற்கான காலம் வந்துவிட்டது. மற்றுமொருமுறை, அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகிய நினிவேயின் மக்களுக்கு தேவன் மிகத் தெளிவானதொரு எச்சரிப்பைக் கொடுக்கிறார். நாகூம் என்ற இன்னொரு தீர்க்கதரிசியை எழுப்பினார். 'இரத்த நகர'த்திற்குத் தம் செய்தியை அனுப்பினார். நாகூம் இப்பணியை எப்பொழுது நிறை வேற்றினார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கி.மு.623ல் நினிவே தாக்கப் படுவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் இருக்கலாம்.

நினிவே, வனாந்தரத்தில் ஒரு மூலையில் மறைந்திருந்த பாலைவனச் சோலை அல்ல; ஒரு பலம் வாய்ந்த பட்டணம் அது. அந்த கால கட்டத்தில் உலகில் இருந்த மூன்று முக்கிய நகரங்களின் ஒரு பகுதி நாகரீகமான நினிவேயாக இருந்தது. மற்ற இரண்டும் கோர்சாபாத் (சார்கானின் இருப்பிடம்) நிம்ரோத் (திக்லாத்பிலேசேரின் இடம்) திக்ரிஸ் ஆற்றின் மேலுள்ள நகரமாயிருந்ததால் நினிவே வணிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. தன் செல்வத்துக்கும் வல்லமைக்கும் நம்பியிருந்த திக்ரிஸ் ஆறுதண் நினிவேயின் வீழ்ச்சிக்கும் முக்கிய காரணமாகும் என நாகூம் மிகத் தெளிவாகக் கூறுகிறான்.

"ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை, புரண்டுவருகிற வெள்ளத்தினால் சர்வசங்காரம் பண்ணுவார். இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்" (நாகூம் 1:8).


Nimrud the base of Tiglath Pileser

அவர்கள் தான் சொன்னதைப் புரிந்து கொண்டார்களா என்பதைத் திட்டமாய் அறிய

"ஆறுகளின் மதகுகள் திறக்கப்படும், அரமனை கரைந்துபோம்" (நாகூம் 2:6).

பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் சுவர்பலகை ஒன்றில் அசுர்பானிபால் அரசனின் படம் காட்டுவது போல் அசீரியர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்தார்கள் என்ற விவரம் நாகூமுக்குத் தெரிந்திருந்தது. அசீரியர்கள் தங்கள் சாதனைகளைக் கொண்டாடி அதிகமாகக் களியாட்டத்திலிருக்கும் சமயத்தில் அழிவு வரும். நாகூமின் எச்சரிப்பைக் கவனியுங்கள்.

"அவர்கள் சன்னபின்னலாயிருக்கிற முட்செடிகளுக்கு ஒப்பாயிருக்கையிலும், தங்கள் மதுபானத்தினால் வெறிகொண்டிருக்கையிலும், அவர்கள் முழுதும் காய்ந்துபோன செத்தையைப் போல எரிந்து போவார்கள்." (நாகூம் 1:10).

"நீயும் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய், நீயும் உன் சத்துருவுக்குத் தப்ப



அரணான கோட்டையைத் தேடுவாய்." (நாகூம் 3:11).

### நிரூபிக்கும் சாட்சிகள்

நாகூமின் தீர்க்கதரிசனம் நிறைவேறியதற்கான இரு பெரும் சாட்சிகள் உண்டு. ஒன்று அகழ்வாராய்ச்சி மற்றொன்று பண்டைய காலத்து வரலாற்று ஆசிரியர்கள் கி.மு.முதலாம் நூற்றாண்டில் வசித்த டியோடோரஸ் மற்றும் சிகுலஸ் எழுதிய பிபிலியோதீக்கா ஹிஸ்டோரிக்கா என்ற 40 தொகுதிகள் கொண்ட புத்தகத்தொகுப்பில் இந்த சம்பவம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 'உலக வரலாற்றின் நடபடிகள்' (Chronicles of World History) என்ற புத்தகம் எழுதிய யூசிஃபியஸ், கி.மு.5ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏரோதோத்தஸ், கி.பி.37-100 வரை வாழ்ந்த ஜோசஃபஸ் ஆகியோர் உலகவரலாறை எழுதினர். பாரிஸ் பல்கலைக் கழகத்தின் முதல்வராயிருந்த சார்ல்ஸ் ரோஸின் என்பவர் 1730ல் மேற்கண்ட வரலாற்று ஆசிரியர்களின் வேலையை ஆராய்ச்சி செய்து 'புராதன வரலாறு' என்ற புத்தகத்தை எழுதினான். 1847ல் அலெக்ஸான்டர் கெயம் என்பவர் கிறிஸ்தவமார்க்கத்தின் 'உண்மைக்கான சான்று' என்ற புத்தகத்தை எழுதினான்.

வேதாகமம், சரித்திர சம்பந்தமானவைகள் எவற்றை யெல்லாம் சொல்லாமல் விட்டதோ அவையெல்லாம் இந்த வரலாற்று ஆசிரியர்களின் புத்தகங்களில் ஏராளமாய் கிடைக்கின்றன. அசீரியாவுக்கும் அதன் அண்டை நாடான பாபிலோனுக்கும் இடையே உள்ள உறவு வினோதமானது. ஆயினும் பாபிலோனிய அதிகாரிகள் மேதிய ராஜாவைத் தூண்டிவிட்டு, அர்பேசஸ் என்ற தளபதியின் தலைமையில் நினிவேயைத் தாக்க வைத்தனர். ஜோசபஸ் இதை உறுதிபடுத்துகிறார். "அவன் (அர்பசஸ்) எப்படி நகரத்தைக் கைப்பற்றினான் என நான் இன்னொரு புத்தகத்தில் கூறுவேன்." என ஏரோதோத்தஸ் கூறுகிறார். ஆனால் அந்தப் புத்தகத்தை அவர் எழுதினதாகத் தெரியவில்லை.

ஒரு பெரிய புயல் எழும்பியதன் காரணமாக திக்ரிஸ் ஆற்றில் முன் எப்பொழுதும் வந்திராத ஒரு பெரிய வெள்ளம் கரைபுரண்டோடியது. டியோ டோரஸ் இவ்வாறு எழுதுகிறான்:

"நினிவேக்குச் சத்துருவாக ஆறு எழும்பி அழிக்கும் என ஒரு பழங்காலத்து தீர்க்கதரிசனம் நினிவேயைப் பற்றி உண்டு. முற்றுகையிடப்பட்டு மூன்றாம் ஆண்டில், இடைவிடாத மழையினால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து நகரத்தின் ஒரு பகுதி மூழ்கியது. 20 பர்லாங்குகள் நீளத்திற்கு சுவரை உடைத்தது. தேவவாக்கு நிறைவேறியது என அரசன் நினைத்துக்கொண்டு ஒரு பெரிய பிணக்குழியை அரசமாளிகையில் ஏற்படுத்தி தன் அனைத்து செல்வம், வைப்பாட்டிகள் மற்றும் அண்ணகர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, தன்னுடன், எல்லாரையும் மாளிகையையும் எரித்துவிட்டான்."

நாகூம் 2:9 மற்றும் 3:9 பற்றிய குறிப்பிடத்தக்க விமர்சனமாக இது இருக்கிறதல்லவா!

இவை எல்லாமே ராணுவ கொண்டாட்டங்களோடு இணைந்து வந்தது. டியோடோரஸ் திரும்பவும் செய்தி அளிக்கிறான்.

"தங்களது முந்தைய வெற்றிகளுக்காகக் குடித்து வெறித்து கொண்டாடிக் கொண்டிருக்கும் போது, சிலர் இவர்களை விட்டோடி ஆர்பசஸ் கூட இருப்பவர்களிடம்



அசீரியர்களின் குடிபோதை, கவலையீனம் பற்றிக் கூறவும், அசீரியர்கள் எதிர்பாராத நேரத்தில் இரவில் வந்து தாக்கினார்கள்."

நாகூம் 3:11 ஐ இது உறுதிபடுத்துகிறதில்லையா!


**பார்த்து நம்புவது**

இந்தத் தீர்க்கதரிசனத்திற்கான சான்றுகளைப் பகுத்தறிவுவாதி எங்கே கண்டு நம்புவான்? விடை : பிரிட்டிஷ் அருங்காட்சியகம்!

**1845**ல் ஆஸ்டன் ஹென்றி லேயார்ட் என்ற பிரிட்டிஷ் தூதரக அதிகாரி மத்திய கிழக்கில் பணியாற்ற வந்தார். ஆட்டோமன் ராஜ்யத்து சுல்தானோடு நல்ல நட்பு கொண்டிருந்தமையால், கேட்பாரற்றுக் கிடந்த சில மண்குவியல்களைத் தோண்டி அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதி பெற்றார். இன்று மோசுல் என்றழைக்கப்படும் நகரத்தினருகே உள்ள ஈராக் தேசத்தைச் சேர்ந்த பாலைவனப் பிரதேசம் அது. அங்கே இரண்டு மைல் நீளத்திற்கு கற்சுவர் சிற்பங்களைக் கண்டார். பிரிட்டிஷ் அருங்காட்சியகம் தந்த உதவி கொண்டு 10 ஆண்டுகாலம் அக் கற்சுவர் சிற்பங்களைக் கப்பல்களில் ஏற்றி அருங்காட்சியகம் கொண்டு சேர்த்தார். இது போன்ற அசீரிய நினைவுச் சின்னங்கள் வேறு எங்கும் கிடைக்கவில்லை. சுண்ணாம்புக் கல்லாலான கற்சுவர்கள் நெருப்பினால் பாதிக்கப்பட்டிருந்தன. "அக்கினி உன்னை பட்சிக்கும்!" என்று நாகூம் சொன்னது நிறைவேறியதற்கான ஆதாரம் மறுக்க முடியாததாக உள்ளது.

**அரசர்களின் விளையாட்டுகள்**

அசீரிய அரசர்களின் பொழுது போக்கு விளையாட்டு சிங்கங்களை வேட்டையாடுவதாகும். இது கற்சுவர் சித்திரங்களாக செதுக்கப்பட்டுள்ளன. சிங்கங்களை வேட்டையாடினாலும் அவர்கள் அவைகளுக்கு மரியாதையும் செலுத்தி வந்தார்கள். தங்கள் அரண்மனைகளைக் காப்பாற்றும் என்ற மூட நம்பிக்கையில் 15 அடி உயரமுள்ள 16 டன் எடையுள்ள செதுக்கப்பட்ட கல்லில் மனிதமுகத்தோடுள்ள சிங்கங்களைச் செதுக்கினார்கள். தானியேல் 7:4 உறுதிப்படுத்துவது போல் அசீரிய ராஜ்யத்தின் பெரிய அடையாளங்களாக சிங்கங்கள் இருந்தன. நினிவேயின் வரப்போகும் அழிவை மனதில் கொண்டவனாய் நாகூம் "சிங்கங்களின் வாசஸ்தலம் எங்கே?" (நாகூம் 2:11) என கேட்கிறார். இதற்கான பதில் ஃபிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் என்பதே.





நம்புதற்கரிய பொக்கிஷங்கள் ஒரே கூரையின் கீழ் கொண்டுள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகம் ஐரோப்பா கண்டத்திலுள்ள அருங்காட்சியகங்களை போலல்லாமல், நுழைவுக் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை. ஆனால் நாம் விலைக்கு வாங்க படங்கள், புத்தகங்கள், நினைவுப் பொருட்கள் என நிறைய உள்ளன. இவை யாவும் வேதாகமம் உண்மை என நிரூபிப்பதற்கான ஆதாரங்கள்.

# சகிப்புத்தன்மை




"ராபீ!.... ராபீ!....! இங்கே திரும்பிவா!.... இப்பொழுதே திரும்பி வா!"

நான் ஒரு செவிட்டு நாயைக் கூப்பிடுவது போல் இருந்தது. பக்கத்து வீட்டு நாயைத் துரத்துவதில் மும்முரமாய் இருந்த ராபி என் சத்தத்தைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. அடுத்து, பக்கத்திலுள்ள காட்டுக்குள் ஓடி, தன் சுதந்தரத்தை அனுபவித்தது. அது இன்பமாகப் புதருக்குள் மறைந்து கொண்ட போது, எனக்கு வந்த கோபத்தில் உடனடியாகத் தண்டனை கொடுக்கக் கூடுமானால், அங்கேயே, அப்போதே அதை நன்கு அடித்திருப்பேன்.

ராபி வெகு நேரம் அங்கே தங்கியிருக்கவில்லை. அது திரும்பி வந்தபோது தன் நாய் மொழியில் "நான் வருந்துகிறேன்," என்றது. குழைந்து, நெளிந்து என்னருகில் வந்து, என் கால்முட்டியின் மீது தன் தலையை வைத்துக்கொண்டது. அதை மன்னித்து, அதன் மிருதுவான கறுப்பு முடியைத் தடவிக் கொடுத்தபோது, அதை அடிக்கக்கூடியவளாக நான் இல்லாததற்காக சந்தோஷப்பட்டேன்.

யார் அல்லது எது உடனடியாகத் தண்டிக்கும் அல்லது தண்டிக்கப்படவேண்டும் என சொல்லக் கூடிய அதிகாரம் மனிதர்களுக்கு இல்லாதது நல்லது. மனிதகுலத்தின் வெறித்தனமான உணர்ச்சிகளுக்கு (ஆக்ரோஷங்களுக்கு) இடமளிக்கப்பட்டிருந்தால் உலகில் ஒருவர் கூட மீந்திருக்க முடியாது.

நம் பரம பிதாவின் அன்பையும் பொறுமையையும் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். உடனடியாக தண்டனை கொடுக்கக் கூடிய வல்லமை அவருக்கு இருக்கிறது. ஆகிலும் நாம் அவருடைய கற்பனைகளைத் திரும்பத் திரும்பக் கவனிக்காமல் நம் சொந்தப் பாதைகளில் தலை தெறிக்க ஓடும் போதெல்லாம் அவர் சகித்துக் கொண்டு பொறுமையாயிருக்கிறார். நாம் வருந்துகிறோம் என்று சொல்ல நமக்குத் தருணம் கிடைப்பதும், இன்னுமொரு தருணம் கிடைக்கும்வகையில் வாழ முடிகிறதும் எத்தனை அற்புதமும் அதிசயமுமானது!

"ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும் நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்." (சங்கீதம் **86:15**)

**ஆனெற் ஹால்ற்றம்**

# ஆரம்ப கால நியாயாதிபதிகள்
# அழுகிற இடத்தில் எச்சரிப்பு

[நியாயாதிபதி 2:1-5]

இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய கற்பனைகளை விட்டு விலகி கானானியரோடு ஒப்புரவாகும்போது அவர்களுக்குத் துன்பம் உண்டானது. எனினும் கருணையும் கிருபையும் நிறைந்த கர்த்தர் தமது மக்களுக்கு இரங்கி [சங்கீதம் 103:8-14], ஒரு செய்தியாளனையனுப்பி, அவர்கள் பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்பும்படி எச்சரித்து சந்தர்ப்பம் கொடுத்தார்.



அந்த செய்தியாளனின் பெயர் இங்கு குறிப்பிடப்பட வில்லை. அவன் கில்கால் என்ற இடத்திலிருந்து போகிம் [அழுகிறவர்கள் என்று பொருள்] என்று பின்பு பேரிடப்பட்ட இடத்துக்குச் சென்றான். இங்குள்ள ஜனங்களிடம் அவன் பேசி அவர்கள் தேவனோடு செய்திருந்த பொருத்தனையை மீறினார்கள் [நியாயாதிபதி 2:2-3] என்றும், தங்கள் வழிகளிலிருந்து மனம்மாறி மனந்திரும்பாத பட்சத்தில் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்றும் எச்சரித்தான்.

கில்கால் என்றால் புரளுவது என்று அர்த்தம். இங்குதான் கர்த்தர் "எகிப்தின் அவமானத்தை அவர்களிடமிருந்து புரட்டிப் போட்டார்". அவர்கள் புரண்டோடும் யோர்தானைக் கடந்து வந்த இஸ்ரவேலர் [யோசுவா 5:9]. கில்காலிலிருந்து வந்த தேவசெய்தியாளன் என்னும்போது, மக்கள் அங்கு செய்துகொண்ட பக்திவிருத்தியான காரியத்தையும், அதனுடன் அவர்கள் கொண்டிருந்த நன்மயான எண்ணங்களையும் நோக்கத்தையும் அது நினைவு படுத்துகிறது.

ஜனங்கள் அந்த தேவசெய்தியாளனுக்குச் செவி கொடுத்தனர். தங்கள் தேவனைவிட்டு எவ்வளவு தூரம் விலகிப் போனார்கள் என்று உணர்ந்தனர். அவர்கள் அதற்காக மனம் வருந்தி, தங்கள் வழிகளை மாற்றுவதாக வாக்குகொடுத்து, மனங்கசந்து அழுதார்கள். இதனால், அந்த இடம் போக்கிம் என்றழைக்கப்பட்டது. அதற்கு அர்த்தம், அழுதார்கள் என்பதாகும்.

கொஞ்சகாலத்துக்கு மக்கள் மனந்திரும்பினபடி கவனத்துடன் நடந்து கொண்டனர். எல்லாம் நன்றாக இருந்தது. வெகுவிரைவில் அவர்கள் தங்கள் முந்தின துக்கத்தையும் அழுகையையும் மறந்தனர். பின்பு மறுபடியும் கானானியரின் ஈடுபாடுகள் அவர்கள் நடுவிலிருந்ததைக் கண்டு, மெதுவாக அவர்களின் தீமையான வழிகளைப் பின்பற்ற ஆரம்பித்தனர். அவர்களில் பலர் கர்த்தரை சேவிப்பதைக் கைவிட்டு, பாகால் மற்றும் அஸ்தரோத் போன்ற விக்கிரகங்களை வணங்க ஆரம்பித்தனர் (நியாயாதிபதி 2:13).

## ஒத்தனியேல் பயங்கரமான கூஷானிடமிருந்து இஸ்ரவேலரை விடுவித்தல் (நியாயாதிபதி 3:9-11)

இஸ்ரவேலரின் பாவங்களைத் தொடர்ந்து அவர்களுக்கு உபத்திரவம் வந்தது. அவர்களுடைய தேசத்தின்மேல் அந்நிய படையெடுப்புகளைக்



கர்த்தர் அனுமதித்தார். ஒரு பெரிய சேனை

சீரியா தேசத்திலிருந்து ஐபிராத்து நதியைக் கடந்து, இஸ்ரவேலரின் வடபகுதியின்மேல் படையெடுத்து, அங்குள்ள பட்டணங்களை அழித்து, வழியில் அகப்பட்ட இஸ்ரவேலரைக் கொன்றனர். அவர்கள்தெற்குப் பகுதியில் நுழைந்து யூதா கோத்திரத்தைத் தாக்க ஆரம்பித்தனர். அவர்களை நடத்தி வந்த குரூரமானவன் கூஷான் ரிஷதாயிம் ஆவான். அதன் பொருள் கூஷான். அதாவது, இரண்டத்தனை பொல்லாங்குகளின் கருப்பு நிழல். ஆனால் இஸ்ரவேலர் கசப்பை உட்கொள்ள வேண்டியதாயிற்று. மக்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கி, இரக்கமற்ற பயங்கரனாகிய ஒரு பிரபுவால் ஆளப்பட்டனர். எட்டு ஆண்டுகள் அவன் அவர்களை வருத்தப் படுத்தினான். சீரியர் இஸ்ரவேலரை ஆண்டு அதன் மூலம் அவர்கள் தேவனை கைவிட்டதற்காக மனங்கசந்து அழும்வரை வருத்தப் பட்டார்கள்.

ஆனாலும், இஸ்ரவேலரின் நடுவில் எகோவாவுக்குப் பயந்து நடக்கிற இன்னும் சிலர் ஜீவித்திருந்தனர். அவர்களில் ஒருவன் ஒத்தனியேல் என்ற பலசாலி. அவன் அளவற்ற மனோதிடமும் விசுவாசமும் உடையவன். காலேப் வேண்டிக்கொண்டதன் பேரில் தேபீர் மலைநாட்டை கைபற்றினவனும் இவனே. பிற உண்மையுள்ள இஸ்ரவேலருடன் சேர்ந்து, கர்த்தரை பற்றும்படியாகவும் அவரிடம் உதவிக்காக மன்றாடவும் ஜனங்களைத் திரட்டினான். அவன் வார்த்தைகள் கேட்கிறவர்களுடைய உள்ளத்தில் கிரியை செய்யுமளவுக்கு பலமுள்ளதாக இருந்தது. இஸ்ரவேலரின் நடுவே மனந்திரும்புதலின் ஆவி கிரியை செய்ய ஆரம்பித்தது. ஒத்தனியேலினால் ஊக்கம் பெற்றவர்களாய் அவர்கள் தங்கள் வழிகளைத் திருத்தினார்கள். அச்சமயம் ஒத்தனியேல் சீரியரின் நுகத்தடியைத் தூக்கிப்போடும்படி ஆயத்தங்கள் செய்ய புறப்பட்டான்.

கர்த்தருடைய ஏவுதலின்படி, அவர்களை ஊடுருவி படையெடுத்த சத்துருவை விரட்டியபடி ஜனங்களைக் கூட்டினான். ஒரு சேனை எழும்பியது.

இரண்டத்தைனை பொல்லாங்கனான கூஷான் யுத்தத்தில் எதிர்கொண்டான். எகோவா அவர்களுக்காக யுத்தம் பண்ணினதால் அவர்களுக்குப் பெரிய ஜெயம் கிடைத்தது. இஸ்ரவேலர் ஒரு பாடத்தைப் படித்தார்கள். உண்மையான தேவசேவையும் வணக்கமும் ஆராதனையும் மறுபடி ஆரம்பமானது. அவர்களின் நியாயாதிபதியாக ஒத்தனியேல் நியமிக்கப்பட்டான். நாற்பது ஆண்டுகளுக்கு தேசத்தில் சமாதானம் நிலவியது.



இவ்வாறு இஸ்ரவேலர், 'பாவஞ்செய்தல், துன்பப்படுதல், கர்த்தரைத் தேடுதல், மறுபடி அவருடைய இரட்சிப்பைக் கண்டடைதல்' என்ற சுழல் நிகழ்ச்சிக்கு ஆளாயினர்.

முடிவிலே அவர்கள் கர்த்தருடைய வழிகளை விட்டு விலகாதிருந்தால், தங்களுக்கு வரக்கூடிய துன்பவாழ்க்கையைத் தவிர்த்திருக்கலாம்! நாமும் இந்தப் பாடத்தைக் கற்றுகொண்டால், எவ்வளவு கஷ்டங்களைத் தவிர்க்கலாம்!!